

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மழை காலங்களில் பொதுமக்கள் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பயிற்சி மற்றும் விழிப்புணர்வு கூட்டம் அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இன்று (21.10.2016) நடைபெற்றது.

செ.வெ.எண்: 745/2016 நாள்: 21.10.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மழை வெள்ளங்களினால் உயிர் இழப்புகள் ஏற்படுவதை தவிர்க்க பொதுமக்கள் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பயிற்சி மற்றும் விழிப்புணர்வு கூட்டம் இன்று (21.10.2016) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மழை காலங்களில் பொதுமக்கள் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பயிற்சி மற்றும் விழிப்புணர்வு கூட்டம் அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இன்று (21.10.2016) நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் மழையினால் அதிக பாதிப்பு ஏற்படும் இடங்களான புத்தேரி கிராமம், வடிவீஸ்வரம் கிராமம், தேரேக்கால்புதூர் கிராமம், வடக்கு தாமரைக்குளம் கிராமம், நீண்டகரை "பி" கிராமம் ஆகிய பகுதிகளில் உள்ள மரம் ஏற தெரிந்த மற்றும் நீச்சல் தெரிந்த வீரர்கள் 10 பேர் வீதம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவர்களது பணியானது வெள்ள அபாயம் ஏதேனும் ஏற்படும்போது, வெள்ளத்தில் சிக்கி தவிக்கும் பொதுமக்களை, முதல் உதவியாளர் (First Responder) என்ற வகையில் அதிலிருந்து எவ்வாறு மீட்டி எடுப்பது குறித்தும், மழை வெள்ளங்களினால் உயிர் இழப்புகள் ஏற்படுவதை தவிர்க்க அவர்களது பங்களிப்பு குறித்தும், வெள்ள நேரங்களில் உடனடியாக ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும், பயிற்சி இன்று நடைபெற்றது.

இதனை நல்லமுறையில் பயன்படுத்தி கொள்வதோடு, உங்கள் நண்பர்களிடமும் எடுத்துக்கூறி, விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

நடைபெற்ற பயிற்சியில் 50-க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு. எ.வி. மூர்த்தி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.